**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.53/19**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.விஜயா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி.விஜயா |
| வயது | - | 60 |
| தந்தை/கணவர் பெயர் | - | க/பெ.செல்வமணி |
| கிராமம் | - | உக்கல்பெண்டை |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

09.09.2024

**வா.சா.1.**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

என் கணவருடன் பிறந்தவர்கள் நான்கு பேர்கள். கிருஷ்ணன், பொன்னுசாமி, செல்வமணி, ரேணு ஆகியோர்கள் ஆவார்கள். என் கணவருடன் சேர்த்து 4 பேர். உக்கல்பெண்டை கிராமத்தில் வேறொரு இடத்தில் என் கணவர் குடும்பத்திற்கு இடம் இருந்தது. அங்குதான் குடும்பத்தார் அனைவரும் வசித்தார்கள். என் மாமனார் காலமான பிறகு என் கணவருக்கும் அவரது பாகத்தில் ஒரு பங்கு இருந்தது. 2000ம் வருடம் என் கணவருக்கு பட்டா வழங்கப்பட்டது. என் கணவருக்கு பட்டா வழங்கப்பட்ட இடத்தில் என் மைத்துனர்கள் ரேணு, கிருஷ்ணன் ஆகியோர்களுக்கும் பட்டா இடம் உள்ளது. என் மாமனாரது இடத்தில் எனது கணவரது பாகம் மைத்துனர் ரேணு என்பவருக்கு குடும்ப சூழ்நிலை காரணமாக விற்பனை

செய்துவிட்டோம். என் கணவர் கேன்சரில் இறந்துவிட்டார். அவர் தற்கொலை எதுவும் செய்துக்கொள்ளவில்லை. மண்டையில் கட்டி இருந்தது. பிரதிவாதி எங்கள் நிலத்தை அபகரித்துவிட்டதாக நில அபகரிப்பு பிரிவு திருவண்ணாமலை-யில் புகார் கொடுத்தோம். தகவல் அறியும் உரிமைசட்டத்தின்கீழ் தகவல் கோரினோம். நான் என் அண்ணன் மார்கபந்துமூலம் தகவல்களை அரசாங்கத்திடம் இருந்து பெற்றேன் அதனை இவ்வழக்கில் என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது பட்டா வழங்கப்பட்ட சர்வே எண் குறித்து எனக்கு தெரியாது.

2. எனக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நான் அனுபவிக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.782 என்பது சர்வே எண்.782/2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தாவாவில் குறிப்பிட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.782/1 என நான் தாவாவில் குறிப்பிட்டு பின்னர் திருத்த தாவாவில் சர்வே எண்.782/13 வீட்டுமனை எண்.9 புதிய கிராம நத்த சர்வே எண்.782/27 என குறிப்பிட்டுள்ளேன் என்றும் பிரதிவாதியின் முன்னோர்கள் சர்வே எண்.782/1ல் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்து குறுக்கு விசாரணை செய்யவேண்டியுள்ளது என்று அவகாசம் கோரினார். எனவே குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.